2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 5

## பயிற்சி 3

பெயர் ______________________________


*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உனது குடும்பத்தைப் பற்றி விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

காவேரிக்கு பொம்மைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அவள் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் எடுக்கும்பொழுது அவளுடைய அம்மா அவளுக்கு ஒரு பொம்மையை எப்போதும் பரிசாக அளிப்பார். அவளும் அந்த பொம்மைகளை ஒரு தூண்டுகோலாகப் பயன்படுத்தி தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பாள். ஒவ்வொரு நாளும் எல்லா பொம்மைகளையும் சுத்தமாகத் துடைத்து, பின் ஒழுங்காக அடுக்குவாள். அவள் அவற்றைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்வாள். அவளுடைய பொறுப்புமிக்க செயல்களைக் கண்டு அவளுடைய பெற்றோர் பெருமிதம் கொள்கின்றனர். அவள் தேர்வுகளுக்கு இன்னும் கடுமையாக படிக்க ஆரம்பித்தாள்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

## கட்டுரை எழுதுதல்

ஒரு கட்டுரையை எழுதுவதற்கு முன் அதைத் திட்டமிடுதல் அவசியமாகும்.
**திட்டமிடல்:**

- தலைப்பை ஒட்டிய முக்கிய கருத்துகளை வரிசைப்படுத்துதல் வேண்டும். முக்கிய கருத்துகளுக்கே முதலிடம் கொடுத்து குறிப்புகளைச் சுருக்கமாக எழுத வேண்டும்.
- ஒரே கருத்தை வலியுறுத்தும் கருத்துகளை ஒன்றாக்க வேண்டும்.
- எழுதிய கருத்துகளையே மீண்டும் எழுதாமல் இருக்க வேண்டும்.

கட்டுரை என்பது முன்னுரை, பொருளுரை (கருத்து), முடிவுரை ஆகியவற்றைக் கொண்டது.

**முன்னுரை: (Introduction)**

- எழுத இருக்கும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்கவேண்டும்.
- தலைப்பை ஒட்டி சுருக்கமக எழுதவேண்டும்.
- தலைப்பையே திரும்பத் திரும்ப எழுதாமல் அத்தலைப்பை விளக்கி எழுதுதல் வேண்டும்.
- பொருளுரையை (கருத்தை) அறிமுகப்படுத்தும் சொல்லியங்களை எழுதவேண்டும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் வளர் தமிழ்

**பொருளுரை (கருத்து): (Body)**

- தலைப்பை ஒட்டி எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி.
- இதைப் பல பந்திகளாகப் பிரித்து அமைக்க வேண்டும்.
- ஒருமைப்பாட்டுடன் ஒரு செய்தியை விளக்க வேண்டும்.
- முதன்மைக் கருத்துகளை விளக்க, ஏற்புடைய எடுத்துக்காட்டுகளை பயன்படுத்தலாம்.

**முடிவுரை: (Conclusion)**

- சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். கருத்துகளை மீண்டும் புகுத்தலாகாது.
- எழுதுபவரின் நிலைப்பாட்டினை வரையறுத்து, படிப்பவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாக இருக்கவேண்டும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் வளர் தமிழ் 5

**3. பின்வரும் தலைப்புக்குப் பொருத்தமாகக் கட்டுரை எழுதவும்.**

## பழங்கள் உண்பதால் விளையும் நன்மைகள்

**திட்டமிடல்**

- பழங்கள் பற்றி... (பழங்களின் பெயர்கள்) - முன்னுரை
- பழங்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள் - முன்னுரை
- பழங்கள் உண்பதனால் ஏற்படும் நன்மைகள் - கருத்து
- நீர் விரும்பும் பழங்கள் எது? ஏன்? - கருத்து
- முடிவுரை

**முன்னுரை**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**கருத்து**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**முடிவுரை**

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

4. **பாட வினாக்களுக்கு விடை தருக.**

- மாமல்லன் என அழைக்கப்பட்ட பல்லவப் பேரரசன் யார்?

______________________________________________

______________________________________________

- 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற கதையில், பறவைகளின் மகிழ்வுக்கு என்ன கரணியம்?

______________________________________________

______________________________________________

- பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

- அறநூலில் மிகவும் சிறந்தது எது?

______________________________________________

______________________________________________

- நரசிம்மபல்லவன் செதுக்கிய சிற்பக்காடு அமைந்திருக்கும் ஊரின் சிறப்புப் பெயர் என்ன?

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5